

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) சென்னை நுங்கம்பாக்கம் காம்தார் நகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் வீடற்ற மாற்றுத்திறன் பெண்களுக்கான காப்பகத்தில் மாற்றுத்திறனாளிகளுடன் கேக்வெட்டி தனது பிறந்த நாளை கொண்டாடி, அவர்களுக்கு புத்தாடைகள், உலர் பழங்கள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.11.2025) சென்னை ராயப்பேட்டை டி.டி.கே சாலையில் செயல்பட்டு வரும் பெருநகர சென்னை மாநகராட்சி நகர்ப்புர வீடற்றோர் காப்பகத்தில் தங்கியுள்ள பெண் முதியோர்களுடன் சேர்ந்து கேக் வெட்டி தனது பிறந்த நாளை கொண்டாடி. முதியோர்களுக்கு புத்தாடைகள், உலர் பழங்கள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கினார்.



சென்னை திருவல்லிக்கேணி, மகாகவி பாரதியார் நினைவு இல்லத்தில் நேற்று (27.11.2025) நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அனமச்சர் மு.பெ.சாமிநாதன் மாநில அளவில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற 36 நபர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர்/இணை இயக்குநர் (சமூக ஊடகம்) செய்தித்துறை அ.வே.சுரேந்திரன், ஊடக மைய அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 281 வது நாள்

## எழும்பூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, நவ. 28 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 281 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (27.11.2025), எழும்பூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 77அ, சுந்தரபுரம், புளியந்தோப்பு. 2) வட்டம்



78அ, சூளை, கணபதி ஹோட்டல் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், சொ.வேலு, வி.சுதாகர், பி.எம்.யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், கோ.மணி, நிர்மலாதேவி. மாமன்ற உறுப்பினர்கள்: B.சுமதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம்சுருதி, ஜி. தாமோதரன், எழும்பூர் வடக்கு தெற்கு பகுதி செயலாளர்கள்: வி.அபாய், தி.தயாளன், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், வி.விஜய குமார், ஆர்.பாபு, டால்வின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல். சுந்தர்ராஜன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம. அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### தொழிலாளர்களுக்கு விரோதமான 4 தொகுப்பு சட்டங்கள் நடைமுறை!

# ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து நாடுதழுவிய ஆர்ப்பாட்டம்!

## திருச்சியில் இன்று நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை பொன்குமார் துவக்கி வைக்கிறார்!

சென்னை,நவ.28-

தொழிலாளர்களுக்கு விரோதமாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நான்கு தொகுப்பு சட்டங்களை ஒன்றிய மோடி அரசு நடைமுறைப்படுத்த உத்தரவிட்டுள்ளது. இது தொழிலாளர்களுக்கு ஒன்றிய அரசு இழைக்கும் மாபெரும் துரோகம் ஆகும். இதனை கண்டித்து விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி நாடு அளவில் கண்டன போராட்டம் நடத்த உள்ளது. அதன் தொடக்கமாக இன்று (28.11.2025- வெள்ளிக்கிழமை) காலை 10 மணி அளவில் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. இந்த போராட்டத்தை துவக்கி வைத்து விவசாயி கள் தொழிலாளர்கள் கட்சி தலைவரும், கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய தலைவருமான பொன்குமார் கண்டன உரையாற்றுகிறார்.

•தமிழ்நாட்டில் முன்மாதிரி யாகவும், சிறப்பாகவும் செயல்படக்கூடிய கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உள்ளிட்ட பல்வேறு வாரியங்கள் கலையக்கூடிய பேரத்து உள்ளது.

• இந்தச்சட்டம் நடைமுறைக்கு வந்தால் தொழிலாளர்களின் பாது காப்பு கேள்விக்குறியாக்கப்படும்.

• நிரந்தரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைக்கப் பட்டு, ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் தினக்கூலித் தொழிலாளர்கள் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

• விரும்பிய நேரத்தில் தொழிலாளர்களை முதலாளி கள் பணி நிக்கம் செய்ய முடியும்.

• ஆண்டு கணக்கில் உலகளாவிய போரட்டங்களுக்குப் பின்பு 8 மணி நேர வேலை சட்டம் கிடைத்தது. அது தற்போது 12 மணி நேர மாக உயர்த்தப்பட்டுள்ளது.

•எல்லா நிறுவனங்களி லும் பெண்கள் இரவில் பணியாற்றுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால் பெண்களின் பாது காப்பு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

• நூறு தொழிலாளர்கள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே தொழிற் சங்கம் தொடங்க முடியும் என்பது தொழிற்சங்க உரிமையை மற்றும் தொழிலாளர்களின் உரிமையை மறுப்பதாகும்

போன்ற தொழிலாளர்களுக்கு விரோதமான இந்த சட்டத்தை திரும்ப பெற கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

28.11.2025 நாளை காலை 10 மணி அளவில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் பொறி.எஸ். ஜெகதீசன் அவர்கள் தலைமை தாங்குகிறார்.

திருச்சி கிழக்கு மாவட்டத் தலைவர் ஆர்.ஜெயராம், தெற்கு மாவட்டத் தலைவர் எ.பொன்னுசாமி, வடக்கு மாவட்டத் தலைவர் சி.மணிவேல், மேற்கு மாவட்டத் தலைவர் டி.எ.மணி, மாநகர் கிழக்கு மாவட்டத் தலைவர் ஆர். கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். திருச்சி மாநகர் மாவட்டத் தலைவர் வி.சுப்பிர மணியன் வரவேற்று பேசுகிறார்.

இந்த கண்டன ஆர்ப் பாட்டத்தில் விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் மாநில இளைஞரணித் தலைவர் வினோத் பொன்குமார், பொதுச் செயலாளர்கள் என்.சுந்தராஜ், ஜெகமுருகன், ஆர்.மகேஸ்வரி, பொருளாளர் ஆர்.சேகர், இணைச் செயலாளர் ஏ.ஜெ.நாகராஜ், தொழிற்சங்க கூட்ட மைப்பின் மாநில பொதுச் செயலாளர் கவிஞர் குருநாக லிங்கம், திருச்சி மாவட்ட தி.மு.க பொறியாளரணித் தலைவர் இ.தென்னரசு உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு கண்டன உரையாற்று கின்றனர்.



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களின் ஆலோசனைபடி 177வது வார்டில் உள்ள ராஜலட்சுமி நகர், சென்னை மேல்நிலைப்பள்ளியில் கழக தலைவர், தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் மகத்தான ஆட்சியில் விலையில்லா இருசக்கர மிதிவண்டிகளை மாணவிகளுக்கு கழக தேர்தல் பணிக்குழு செயலாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பெ.மணிமாறன் வழங்கினார். உடன் பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியர்கள், கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி 142 அ வட்டத்தில் மாவட்ட பிரதிநிதி பொன் ஜெய்சிங் தலைமையில், பொறியாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.எஸ்.ரமேஷ், தலைமைகழக பேச்சாளர் ஏ.எஸ்.பழனி முன்னிலையில் கழக இருவண்ணக்கொடி யேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள், குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. உடன் எம்.சுந்தர், வே.பிரபு, கழகஎஸ்.ரமேஷ், ஆ.அருண்குமார், நிர்மல், தினேஷ்ராம், சுதர்சன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்:

# தமிழ்நாடு முழுவதும் கழக மருத்துவ அணி சார்பில் மருத்துவ முகாம்கள்!

## கழக மருத்துவ அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, நவ.28-

திமுக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னையில் உள்ள ஹோட்டல் அக்கார்ட் மெட்ரோபாலிடனில் நடைபெற்றது.

மருத்துவ அணியின் மாநிலத் தலைவர் மரு கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி இக் கூட்டத்திற்கு தலைமையேற்றார். மாநிலச் செயலாளர் மரு எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு அவர்கள் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று உரையாற்றினார்.

இணைச் செயலாளர் மரு ஆர்.அண்ணாமலை, துணைச் செயலாளர்கள் மரு ஆர்.இராஜேஸ்வரி மோகன்காந்தி, மரு ஆர்.டி.அரசு, மரு ஜெ.அருண், மரு அஞ்சுகம் பூபதி, மரு கலைக் கதிரவன், மரு ஆர்.திலீப்குமார், மரு செண்பகவிநாயகம், திருமிகு திலகவதி ஜெயராஜ், மரு இராஜேஷ்பாபு, மன்சூர் அலி கான், மரு ஆர்.எஸ்.கிருத்திகா, மரு இரா.விவேக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மருத்துவ அணி சார்பில் இது வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்து ஆய்வும், அடுத்தக் கட்ட பணிகள் குறித்த ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டன.

மாநில அளவிலான நிர்வாகிகளுக்கான பொறுப்பு மாவட்டங்கள் மாற்றி அமைக்கப் பட்டு அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பின்வரும் எட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை சட்டமன்றத் தொகுதியின் மருத்துவ அணி அமைப்பாளராக பணியாற்றி வந்த மருத்துவர் பி.ராஜராஜன் அவர்கள் சமீபத்தில் மறைந்தார். கழகத்தில் தீவிரமாக பணியாற்றி, தஞ்சை பகுதியில் மருத்துவ அணிக்கு வலு சேர்த்த தோழரின் இறப்புக்கு, மருத்துவ அணி சார்பில் இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அளவில் எந்த மாநிலமும் எட்ட முடியாத வகையில் 11.19 சதவீத பொருளாதார வளர்ச்சி, 10 லட்சம் கோடிக்கும் மேலாக தொழில்துறையில் அந்நிய முதலீடுகள், 14 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் மேலாக குறுவைப் பருவத்தில் நெல் கொள்முதல், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் இரண்டு கோடியை தாண்டிய பயனாளர் எண்ணிக்கை, தமிழ்நாடு முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் உள்ளிட்ட பல நூறு திட்டங்களின் வழியாக, மகத்தான சாதனைகளை நிகழ்த்தி வருகிறது திராவிட மாடல் அரசு. தமிழ்நாட்டின் வளர்ச்சியை உறுதி செய்து, சமூகப் பாதுகாப்பு கட்டமைப்புகளை வலுப்படுத்தி வரும் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மருத்துவ அணி நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.

**இளைஞர் அணி நடத்திய அறிவுத் திருவிழா!**

திராவிட இயக்கத்தின் இலட்சியங்களை, வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையில், திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம், முரசொலி பாசறை, முத்தமிழறிஞர் பதிப்பகம், தொகுதி தோறும் கலைஞர் நூற்றாண்டு நூலகம், வீதி எங்கும் உரையாற்ற 200 இளம் பேச்சாளர்கள், தமிழ்நாடு முழுவதும் இளைஞர்களுக்கு சமூக வலைதள பயிற்சி, இயக்கத்தின் வரலாற்றை ஆவணப்படுத்தும் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல், 75 ஆண்டு கால கழகத்தின் அறிவு வலிமையை பறைசாற்றும் அறிவுத் திருவிழா என இயக்கத்தின் இளைஞர்களை, இலட்சிய வழிப்படுத்தும் கழகத்தின் இளம் தலைவர் இளைஞர் அணிச் செயலாளர்,





துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், கழக அரசின் சாதனைகளை மக்களிடம் பரப்பும் நிகழ்வுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின் படி, தமிழ்நாடு முழுவதும் மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், விழிப்புணர்வு பேரணிகள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு அரசு சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், மண்டல அளவில் நான்கு ஆங்கில கருத்தரங்கங்கள், மண்டல அளவில் ஆறு பகுத்தறிவு மற்றும் சமூக நீதி கருத்தரங்கங்கள், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளான சமத்துவ நாளை முன்னிட்டு சென்னையில் பிரம்மாண்ட கருத்தரங்கம், மாவட்டம் மற்றும் தொகுதி அளவில் நிர்வாகிகள் நியமனம் என மருத்துவ அணியின் தொடர்ச்சியான பணிகளில் பங்களிப்பு செலுத்தி வரும், மாநில நிர்வாகிகள், மாவட்டம் மற்றும் தொகுதி நிர்வாகிகள் அனைவருக்கும் இக்கூட்டம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. தலைவரின் கட்டளைப்படி சீரிய வகையில் தொடர்ச்சியாக செயல்பட இக்கூட்டத்தில் உறுதி ஏற்கப்படுகிறது.

**வாக்காளர் பட்டியலில் குழப்பங்கள்!**

தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்கிற பெயரில், தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர் பட்டியலில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறது. வாக்காளர்களையும், இப்பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களையும் அலைக்கழிக்கும் வகையில், அவசரகதியில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது. தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி தமிழ்நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கும் பாஜகவின் சதிச் செயலுக்கு எதிராக, கழகத் தலைவர் வகுத்துள்ள திட்டங்களின் படி, மருத்துவ அணி சார்பில் நாம் ஒவ்வொருவரும் முழுமையான அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டும்.

மேலும் நமது வாக்குகள், நமது குடும்பத்தினர் வாக்குகள், நமது சுற்றத்தினர் வாக்குகள், மருத்துவமனைகள், ஆய்வகங்கள், மருந்தகங்கள், சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட நாம் தொடர்புடைய இடங்களில் உள்ள அனைவரின் வாக்குகளையும் உறுதி செய்ய தீவிரமான களப் பணி ஆற்றுவது என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

கல்வி நிதி மறுப்பு, மொழித் திணிப்பு, மதுரை கோவை உள்ளிட்ட மாநகரங்களுக்கான மெட்ரோ திட்டங்கள் நிராகரிப்பு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்த மறுப்பு என பல வகைகளிலும் தமிழ்நாட்டைத் தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் பாஜகவிற்கும், அதற்கு துணை போகும் அதிமுகவிற்கும் மருத்துவ அணி சார்பில் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மருத்துவ ஆணையம், சுகாதாரத் துறையில் மாநிலங்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் அதிகார குவிப்பிற்கு இது வழி வகுக்கிறது. குறைந்தபட்சம் மாநிலங்களின் சரியான பிரதிநிதிகள் அடங்கிய ஆணையமாக தேசிய மருத்துவ ஆணையம் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என திமுக மருத்துவ அணி வலியுறுத்துகிறது.

பாஜகவின் அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர்ச்சியாக போராடிக் கொண்டே, தமிழ்நாட்டை அனைத்து துறைகளிலும் முதன்மை மாநிலமாக வளர்த்து வரும் ‘திராவிட மாடல்’ அரசு மீண்டும் அமைய, கழகம் ஏழாவது முறையாக அரியணை ஏற, நம் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சராவதற்கான அனைத்து பகுதிகளையும் மேற்கொள்ளவும், முழு ஈடுபாட்டுடன் விரிவான பரப்புரை திட்டங்களை வகுத்து 2026 தேர்தலுக்காக பணியாற்றவும், மருத்துவ அணி நிர்வாகிகளை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் கழக மாவட்டங்களைச் சேர்ந்த மருத்துவ அணி மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

# இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்!



இளைஞர்களின் இனிய கனவே...
ஏழைகளின் அட்சய பாத்திரமே....
நாளைய இந்தியாவின் நடு நாயகமே..

இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்!
சின்னவரே... சிறு சந்தேகம்! வாழ்த்தும்
போதும்... எதிரியை வீழ்த்தும் போதும்...
சிரித்துக் கொண்டே செய்யும் கலையை எங்கே கற்
“அது கல்... பேசாது”... கலைஞர் பராசக்தியில் எழுதியது...
“இது செங்கல்...”
ஒன்றிய அரசின் புளுகு மூட்டையைப் பிரிச்சு மேயும்.
உதயநிதி மதுரையில் பேசியது.

தமிழர் வீரத்தை பழித்த கனக விசயரை களத்திலே பந்தாடி... அவர்களை இமயத்திலிருந்து கல் சுமந்துவர வைத்து.. அந்தக் கல் கொண்டு கண்ணகிக்கு கோட்டம் அமைத்தவன் சேரன் செங்குட்டுவன்! அதனை ஓரங்க நாடகமாக வடித்தவர் கலைஞர்.



தற்போது தமிழ் மாநிலத்துக்கு எல்லா விதத்திலும் துரோகம் செய்யும் ஒன்றிய அரசை ஜனநாயக ரீதியாக ஓடவிட்டு நம் உரிமைகளை மீட்டெடுக்கப் போகிறவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் அரசு தளபதி உதயநிதி ஸ்டாலின்.

இவர் காலத்தில் கழகங்கள் ஒன்றாகும். மாநில சுயாட்சி மலரும், மத்தியில் கூட்டாட்சி உருவாகும். ஒரு தமிழன் பாரதப் பிரதமராகும் காட்சி நிறைவேறும்.

இயக்குநர் வி.செ.குகநாதன்